மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கோரிக்கையைக் கண்டிப்பாக பரிசீலனை செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

உப மின்கோட்டம்

***144—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதி, பாபநாசம் மற்றும் அம்மாப்பேட்டை மின் பகிர்மானங்களை இணைத்து பாபநாசம் உப மின்கோட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் உப மின்கோட்டத்தில் 7 பிரிவு அலுவலகங்கள் உள்ளன. அதில் 85,405 மின்னிணைப்புகளும், அம்மாப்பேட்டை உப மின்கோட்டத்தில் உள்ள 2 பிரிவு அலுவலகங்களில் 21,019 மின்னிணைப்புகளும் உள்ளன. எனவே, பாபநாசம், அம்மாப்பேட்டை ஆகிய இரண்டு உப மின்கோட்டங்களை உள்ளடக்கி, பாபநாசம் புதிய மின் கோட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஜனவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் மற்றும் அம்மாப்பேட்டை ஆகிய இரண்டு உப மின்கோட்டங்களை இணைத்து, பாபநாசம் புதிய மின் கோட்டம் அமைக்கப்படும் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

ஒரு மின் கோட்டம் அமைய வேண்டுமென்றால், அதன் கீழே 3 உப மின்கோட்டங்கள், ஒவ்வோர் உப மின்கோட்டங்களுக்கு கீழே 4 பிரிவுகள் இருக்க வேண்டும். என்னுடைய பாபநாசம் தொகுதியைப் பொறுத்தவரையிலும், பாபநாசம் தொகுதியில், கும்பகோணம் உப மின்கோட்டத்தில் பட்டீஸ்வரம், சுவாமிமலை என்று 2 பிரிவுகளும், பாபநாசம் உப மின்கோட்டத்தில் 7 பிரிவுகளும், சாலியமங்கலம் உப மின்கோட்டத்தில் 5 பிரிவுகளும் என மொத்தம் 14 பிரிவுகள் இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மெலட்டூர், தஞ்சாவூர் மின் கோட்டத்தில் இருக்கின்றது. அம்மாப்பேட்டை, ஒரத்தநாடு மின் கோட்டத்தில் இருக்கின்றது. 3 உப மின்கோட்டங்கள் அமைந்தால்தான் ஒரு மின்கோட்டத்தை அமைக்க முடியும். பாபநாசத்தில், பாபநாசம் பேரூராட்சி, பாபநாசம் ஊரகம், கபிஸ்தலம் மற்றும் திருக்கருகாவூர் இவையெல்லாம் ஒரு பிரிவாகவும், அய்யம்பேட்டை உப மின்கோட்டத்தில், அய்யம்பேட்டை, அய்யம்பேட்டை ஊரகப் பகுதி, கணபதி அக்ரஹாரம் ஆகியவையும் இருக்கின்றன. தஞ்சாவூர் மின் கோட்டத்தில் இருக்கக்கூடிய மெலட்டூரை, அய்யம்பேட்டை உப மின்கோட்டத்தில் சேர்க்க வேண்டும். ஏற்கெனவே, சாலியமங்கலத்தில் 5 உப மின்கோட்டங்கள் இருக்கின்றன. எனவே, பாபநாசம் உப மின்கோட்டம், அய்யம்பேட்டை உப மின்கோட்டம், சாலியமங்கலம் உப மின்கோட்டம் ஆகியவற்றைச் சேர்த்து, ஒரு புதிய மின் கோட்டத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 ஜனவரி 12

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் தொடங்கி, இன்றுவரை பிரிவு அலுவலகமாக இருந்தாலும் சரி, உப மின்கோட்டமாக இருந்தாலும் சரி, கோட்டமாக இருந்தாலும் சரி அல்லது வட்டமாக இருந்தாலும் சரி, மண்டலமாக இருந்தாலும் சரி, ஏற்கெனவே இருக்கக்கூடிய மின்னிணைப்புகள் சில பகுதிகளில் குறைவாகவும், சில பகுதிகளில் மிக அதிகமாகவும் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பிரிவு அலுவலகங்களைப் பொறுத்தவரையில், மேடவாக்கத்தில் 52,689 இணைப்புகள் இருக்கின்றன. அதுவே பாபநாசத்தில் 678 இணைப்புகள்தான் section-ல் இருக்கின்றன. அதேபோல, உப மின்கோட்டத்தைப் பொறுத்தவரையில், நீலகிரி மாவட்டம், பந்தலூர் உப மின்கோட்டத்தில் 4,619 இணைப்புகள் இருக்கின்றன. மேடவாக்கத்தில் 1,71,562 இணைப்புகள் இருக்கின்றன. கோட்டத்தைப் பொறுத்தவரையில் தாம்பரத்தில் 6,79,239 மின்னிணைப்புகளும், கூடலூர் கோட்டத்தில் 68,022 மின்னிணைப்புகளும் இருக்கின்றன. தாம்பரம் போன்ற ஒரு சில பகுதிகளில், 3 கோட்டங்களாகப் பிரித்துச் செயல்பட வேண்டிய நிலை இருந்தது. தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள், ஆய்வுக் கூட்டத்தின்போது அனைத்தையும் ஒருநிலைப்படுத்தி, மறுசீரமைத்து, புதிய அலுவலகங்கள் தொடங்கப்பட வேண்டுமென்ற உத்தரவுகளை வழங்கியுள்ளார்கள். ஆக, ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த ஒன்றரை ஆண்டுகளில் 11 அலுவலகங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வரப்பெற்றிருக்கின்றன. மேலும், மூன்று புதிய மண்டலங்களையும் திறந்து வைத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அம்மாப்பேட்டை, பாபநாசத்தை உள்ளடக்கி புதிய அலுவலகத்தை விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–20

தமிழ்நாடு முழுவதும் மாவட்டங்கள், மாறிகூட மின்னிணைப்புகள் இருக்கின்றன. உதாரணத்திற்கு கரூர் மாவட்டத்தில், பல்லடம் பகுதிக்குச் சம்பந்தப்பட்டு இருக்கின்ற அலுவலகம் இருக்கின்றது. இதுபோன்ற சீரமைப்புகளை தற்போது மின்வாரியம் முன்னெடுத்து, மிக விரைவாக அவை நடைபெற்றுக்

2023 ஜனவரி 12]

கொண்டிருக்கின்றன. விரைவில், அவற்றை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பாபநாசம் தொகுதியில், இரும்புதலை ஊராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் குறைந்த மின்னழுத்தம் காரணமாக அங்கிருக்கக்கூடிய விவசாய பம்புசெட்டுகள் பாதிப்படைகின்றன. வீடுகளிலும்மி ன்சாதனப் பொருட்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இரவுநேர மின்பழுதால் குழந்தைகளுடைய படிப்பும் பாதிக்கப்படுகின்றது. இரும்புதலை ஊராட்சியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் இருக்கின்றது. அதுதொடர்பான கோரிக்கையை அப்பகுதி மக்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இரும்புதலை பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிந்துகொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தியை அதிகரிக்கின்ற அதேவேளையில், மின் விநியோகத்திற்கான கட்டமைப்பையும் வலுப்படுத்த வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 37,014 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. பழுதடைந்த மின்மாற்றிகளுக்குப் பதிலாக 2,179 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல, வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக, கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 3,14,631 மின் கம்பங்கள் புதிதாக அமைக்கப்பட்டு, பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. பழுதடைந்த மின்கம்பங்களைப் பொறுத்தமட்டில், புதிதாக 78,404 மின்கம்பங்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. 316 மின் துணை நிலையங்களை அமைப்பதற்கான உத்தரவுகளையும், அனுமதிகளையும் மாண்புமிகுமுதலமைச்சர் அவர்கள் வழங்கி, அவற்றிற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில், துறைரீதியாக

ஆய்வு செய்து, தேவை ஏற்படின் முன்னுரிமை அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா

***58088—திரு. ஈ. பாலசுப்ரமணியன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கடந்த 11–12–2021 அன்று சேலம் மாவட்டம், சீலநாயக்கன்பட்டியில் நடைபெற்ற அரசு விழாவில், சேலத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா ஒன்று அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அதனைத்தொடர்ந்து, சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தாலுகா, ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைத்திட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட இடத்தை Special Purpose Vehicle *நிர்வாகத்தினருக்கு நிலமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், விரிவான திட்ட அறிக்கை, பூங்காவின்* SPV*-யால் தயார் செய்யப்பட்டு வருகிறது. விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டு, நிலமாற்றம் செய்யப்பட்டவுடன் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.*